# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# DEVAKOTTAI

**CC.No.112/2025**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | கருப்பையா |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | மாரி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.07.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கொசவக்கோட்டையில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 21.05.2025 ம் தேதி இரவு 3.00 மணியளவில் என் வீட்டில் இருந்த 4 ஆடுகளை ஆஜர் எதிரிகள் தூக்கிகொண்டு போய்விட்டார்கள். அன்றைய தினம் அறந்தாங்கி வாரச்சந்தையில் காலை 6.00-7.00 மணியளவில் நானும் என் உறவினர் சாட்சி சந்திரசேகர் என்பவரும் சென்று மேற்படி ஆடுகளையும் அதை எடுத்துச்சென்ற ஆஜர் எதிரிகளையும் பிடித்து கொண்டு வந்து போலீசாரிடம் ஒப்படைத்தோம். பின்பு போலீசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(மேற்படி புகார் அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள 3 ஆடுகளைதான் நான் நீதிமன்றத்தில் பெற்றுச்சென்றேன். (**மேற்படி ஆடுகளின் நிழற்படம் அ.சா.ஆ.2 குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**என் கையில் என்ன எழுதி வைத்துள்ளேன் என்றால் சம்பவம் நடந்த தேதியை எழுதி வைத்துள்ளேன், 1 வருடம் ஆனதால் ஞாபகமில்லை. அறந்தாங்கி சந்தை செவ்வாய்க்கிழமை நடக்கும். சந்தை எத்தனை மணிக்கு கூடும் என்றால் இரவு 1 மணி,3 மணிக்கு எல்லாம் கூடும். நாங்கள் ஆடுகளையும் எதிரிகளையும் பிடித்து விட்டு அறந்தாங்கி தாலுகா காவல் நிலையத்திற்கு சென்றோம். அறந்தாங்கி தாலுகா காவல் நிலையத்தில் இருந்து அவர்களே தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லிவிட்டார்கள். எத்தனை மணிக்கு அறந்தாங்கி காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னேன் என்றால் மாலை 4 மணிக்கு தகவல் சொல்லிவிட்டேன். அதன்பிறகு எத்தனை மணிக்கு நாங்கள் தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்திற்கு வந்தோம் என்றால் இரவு 12.00-1.00 மணி இருக்கும். நான் தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்திற்கு வரும்போது யார் யார் என் கூட வந்தார்கள் என்றால் நானும் சந்திரசேகரும் வந்தோம். புகாரை எந்த காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் அறந்தாங்கியில் கொடுத்து அவர்கள் தேவகோட்டைக்கு தெரியப்படுத்தினார்கள். புகாரை நான் தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்றும் அறந்தாங்கி காவல் நிலையத்தில்தான் கொடுத்தேன் என்றால் சரிதான். புகாரை அறந்தாங்கி காவல்**

நிலையத்தில் எழுத்துப்பூர்வமாக கொடுத்தேனா வாய்மொழியாக கொடுத்தேனா என்றால் அங்கு வாய்மொழியாக சொன்னேன் அவர்கள் தேவகோட்டைக்கு தகவல் சொல்லி தேவகோட்டைக்கு வந்தபிறகு மறுநாள் காலையில் தேவகோட்டையில் வாக்குமூலமாக கொடுத்தேன். மேற்படி புகாரை யார் எழுதினார்கள் என்றால் தேவகோட்டை தாலுகா காவல் நிலைய தலைமைக்காவலர் எழுதிக்கொடுத்தார். புகாரை நான் எழுதாததால் அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, படித்துக்காண்பித்தார்கள், நான் சொல்ல சொல்லதான் எழுதினார்கள். புகாரில் ஆடுகள் என்ன என்ன கலர் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் ஆடுகளின் எடைகளையும் குறிப்பிட்டு சொன்னேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தகவல் அறிந்து எவ்வாறு அறந்தாங்கி சந்தைக்கு சென்றேன் என்றால் அன்று அங்கு வாரச்சந்தை என்று தெரிந்ததால் அங்கு சென்றேன். மற்ற ஊர்களுக்கு செல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி சந்திரசேகர் என் மைத்துனர், சாட்சி மகேஸ்வரி என் மனைவி. சாட்சி சீனிவாசன், சாட்சி ரம்யா, சாட்சிகள் ராமநாதன், ரெத்தினம் ஆகியோர்கள் என் உறவினர்கள். போலீசார் என்னை தாலுகா காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். மற்ற சாட்சிகளையும் காவல் நிலையத்தில் வைத்துதான் விசாரித்தார்களா என்றால் ஆமாம். தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் 26.05.2025 ம் தேதி காலை 10.00 மணிக்கு விசாரித்தார்கள். அறந்தாங்கி சந்தையில் எத்தனை ஆடுகள் இருந்தது என்றும் எத்தனை நபர்கள் கூடியிருந்தார்கள் என்றால் 10,000, 20,000 ஆடுகள் வரும். நான் ஆடுகளை வேறு ஒரு நபரிடம் இருந்து பிடித்தேன், அவர் ஆடுகளை ஆஜர் எதிரிகளிடம் இருந்து வாங்கியதாக தெரிவித்தார். நான் சொல்வதுபோல் எந்த

சம்பவமும் நடக்கவில்லை என்றும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

**S/d..Karupaiah**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# DEVAKOTTAI
## CC.No.112/2025

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | சந்திரசேகர் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | கருப்பையா |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.07.2026

எதிரிகள் ஆஜர்

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சாத்தமங்களத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 21.05.2025 ம் தேதி இரவு 3.30-4.30 மணியளவில் அ.சா.1 ன் வீட்டில் கட்டியிருந்த ஆட்டுக்குட்டிகளை காணவில்லை. நாங்கள் தேடிப்போனோம். நான் ஊர்ப்பக்கத்தில் தேடிப்போனேன். அ.சா.1 சந்தைக்கு தேடிப் போய் அறந்தாங்கி சந்தையில் இருந்து பிடித்துக்கொண்டு வந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன்பேரில் இந்நீதிமன்றம் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 21.05.2025ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தபோது கடந்த 21.05.2025ம் தேதி அதிகாலை 3.00 மணிக்கு அ.சா.1ன் வீட்டிற்கு அருகே ஆடுகள் கத்தும் சத்தம் கேட்டதாகவும் அ.சா.1 போய் பார்த்தபோது ஆடுகள் இரண்டு நபர்கள் ஆடுகளை டாடா ஏஸ் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு இருந்தார்கள் என்றும் அவர்களை நாங்கள் 3 பேரும் பிடித்து விசாரித்தபோது பெயர் விபரங்கள் கூறினார்கள் என்றும் பின்பு ஆடுகளையும் எதிரிகளையும் டாடா ஏஸ் வாகனத்தையும் காவல் நிலையம் கொண்டு வந்து ஒப்படைத்தோம் என்று சொன்னேன் என்றால் சரிதான்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா. 1 என் மைத்துனர். அ.சா.1ன் ஊருக்கும் என் ஊருக்கும் எவ்வளவு துாரம் என்றால் சுமார் 5 km. எதிரிகளை அறந்தாங்கி சந்தைக்கு அ.சா.1 போய் பார்த்துதான் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னார் என்றால் சரிதான். அ.சா.1ன் வீட்டில் சம்பவம் நடந்ததாக சொல்லி புகார் எதுவும் கொடுத்தோமா என்றால் ஆடை பிடித்து கொண்டு வந்தபிறகுதான் புகார் கொடுத்தோம். நான் அறந்தாங்கிக்கு செல்லவில்லை, காவல் நிலையத்திற்குதான் சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்ன தேதியில் எத்தனை மணிக்கு போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் 21.05.2025ம் தேதி மதியம் 2.00-3.00 மணி இருக்கும். எதிரிகளை நான் காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் அ.சா.1 என் மைத்துனர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:இல்லை</u>**

S/d.Chandrasekar

| |
|---|
| சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,<br>குற்றவியல் நடுவர்,<br>தேவகோட்டை. |

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.112/2025**

Deposition of witness for Prosecution அ.சா.3

| | | |
|---|---|---|
| பெயர் | : | மகேஸ்வரி |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | கருப்பையா |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.07.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கப்பலூரில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் எதிரிகளை தெரியும். கடந்த 21.05.2025 ம் தேதி விடியற்காலை 3.00 மணியளவில் நாய் குரைக்கும்போது வெளியில் வந்து பார்த்தபோது ஒரு டெம்போ நின்று கொண்டிருந்தது. எதிரிகள் எங்கள் வீட்டு ஆட்டை திருடிவிட்டார்கள். பின்பு நான் என் கணவர் எழுந்து விளக்கு போட்டு எதிரிகளை பிடித்துவிட்டோம். பின்பு காவல் நிலையத்தில் எதிரிகளையும் ஆட்டு குட்டிகளையும் டெம்போவையும் கொண்டு வந்த ஒப்படைத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து எங்கங் வீடு எவ்வளவு தூரம் என்றால் வீட்டிற்கு முன்னால் 10,15 அடி தூரம் இருக்கும். ஆடுகள் இருந்த இடம் என்ன திசை என்றால் என் வீட்டிற்கு தெற்குபுறம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் யார் யார் வீட்டில் இருந்தோம் என்றால் நானும் என் கணவரும் இருந்தோம். காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு தகவல் சொன்னோம் என்றால் நாங்களேதான் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தோம். எத்தனை மணிக்கு எந்த காவல் நிலையத்திற்கு வந்தோம் என்றால் தேவகோட்டை காவல் நிலையத்திற்கு காலை 6.00 மணிக்கு வந்தோம். தேவகோட்டை டவுன் காவல் நிலையமா தாலுகா காவல் நிலையமா என்று தெரியுமா என்றால் தெரியாது. காவல் நிலையத்திற்கு இரு சக்கர வாகனத்தில் வந்தோம். காவல் நிலையத்தில் புகாரை என் கணவர்தான் கொடுத்தார். நான் முதல் விராசரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் சரிதான். போலீசார் என்னை காவல் நிலையத்தில் காலை 6.00 மணியளவில் விசாரித்தார்கள். நான் சொல்வதுபோல் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் அ.சா.1 என் கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

S/d..Maheshwari

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.112/2025**

Deposition of witness for Prosecution அ.சா.4

| | | |
|---|---|---|
| பெயர் | : | ரம்யா |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சுப்பையா |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.07.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது பருத்திக்குடியில் வசித்து வருகிறேன். கடந்த 21.05.2025ம் தேதி தேவகோட்டை தாலுகா போலீசார் கொசவக்கோட்டையில் ஆட்டுக்குட்டி காணாமல் போனது பற்றி விசாரித்தார்கள். சம்பவ இடத்தின் திசைகளை கேட்டு மேப் வரைந்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி பார்வை மகஜரில் உள்ள 2ம் கையெழுத்து அ.சாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போலீசார் காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை ஆட்டுக்குட்டி காணாமல் போன வீட்டில் விசாரித்துக்கொண்டிருந்தபோது நான் வந்தேன், அப்போது கையெழுத்து வாங்கினார்கள். அ.சா.1 என் பக்கத்து ஊர்க்காரர். போலீசார் என்னை 21.05.2025 ம் தேதி காலை 9.00 மணியளவில் விசாரித்தார்கள். என்னிடம் கையெழுத்து வாங்கிய பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ன வழக்கு போடப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் படித்து பார்க்கவில்லை மேப் போட்டு கையெழுத்து வாங்கினார்கள். படித்து பார்க்காததால் அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையெழுத்து போட்டேனா என்றால் சரியல்ல, அந்த இடத்தில் விசாரித்ததால் கையெழுத்து போட்டேன். சம்பவ இடத்தை விசாரிக்க 2 போலீசார் வந்திருந்தார்கள்.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

S/d.Ramya

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.